இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அப்பெருமகனாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(பின்னர் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

3. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் வினா எண் 1, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு நிதி அமைச்சர்.

1--

வாக்குச் சாவடி அமைத்தல்

**87478--டாக்டர் ஜெ. பரந்தாமன்:*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

வட ஆற்காடு அம்பேத்கர் மாவட்டம், பேர்ணாம்பட்டு 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர், பேர்ணாம்பட்டு தொகுதி (மசிக்கம்) ஓணான்குட்டை சாத்கர் பங்களா மேடு பகுதி ராஜாக்கல் ஊராட்சி, சங்கராபுரம் கிராமம் ஆகிய இடங்களில் வாக்குச் சாவடி அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதியமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது ஒட்டர்பாளையம் என்றழைக்கப்படும் சங்கராபுரத்தில் ஏற்கெனவே ஒரு வாக்குச் சாவடி உள்ளது. ஏனைய கிராமங்களில் வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதாலும், அவ்வாக்காளர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள வாக்குச் சாவடி இரண்டு

1996 பிப்ரவரி 15]

கிலோ மீட்டருக்குள் அமைந்திருப்பதாலும், தகுந்த கட்டிடங்கள் இல்லை என்பதாலும் ஒவ்வொரு கிராமத்திற்கும் தனித்தனியாக வாக்குச் சாவடி அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

முற்பகல் 10-10

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள், வயது முதிர்ந்தோர் கிட்டத்தட்ட 1 கிலோமீட்டர் தூரத்திற்கு மேல் நடந்து செல்வதற்கு சிரமமாக இருக்கிறது. அந்த தூரத்தின் அடிப்படையிலே கூட அந்த எல்லையைத்தான் குறித்திருக்கிறார்கள். அந்த எல்லையைத் தாண்டிக்கூட இப்போது கிராமங்கள் விரிவடைந்திருக்கின்றன. அதே போன்று தேர்தல் விதிமுறைகளின்படி மேற்கூறியவர்களை வாகனங்களில் அழைத்து வரக்கூடாது என்ற கட்டுப்பாடும் இருக்கிறது. எனவே அவர்களின் நலன் கருதியும் அதேபோன்று கட்டிடங்கள் இல்லாத பகுதியில் பஞ்சாயத்து அலுவலகங்களிலும், அல்லது வேறு வசதியான கட்டிடங்கள் இருந்தால் அந்தப் பகுதிகளில் முன்னுரிமை தந்து வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள விதிமுறைகளின்படி அதிகபட்சம் ஒரு வாக்குச்சாவடியில் 1,200 வாக்காளர்கள் இருக்கலாம் என்று அமைக்கப்பட்டிருக்கின்றது. வாக்காளர்கள் நடந்துசென்று வாக்களிக்க வேண்டிய வாக்குச்சாவடிகளின் அதிகபட்ச தூரம் 2 கிலோ மீட்டர் அளவிற்கு மிகாமல் இருக்கவேண்டும் என்றும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிடுகின்ற அந்த ஊர்களைப் பொறுத்தவரையிலும் பேரணாம்பட்டு 1-வது வார்டு எம்.ஜி.ஆர். நகர் வாக்காளர்களின் எண்ணிக்கை 578 ஆகும். அவர்கள் அரை கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பேரணாம்பட்டு இஸ்லாமிய மேல்நிலைப்பள்ளியில் அமைப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்குச் சென்று வாக்களிக்கின்றனர். வாக்குச்சாவடிகளின் தற்போதைய அதாவது ஆண்கள், பெண்கள் ஆகிய இரண்டு வாக்குச் சாவடிகளின் மொத்த வாக்காளர்களுடைய எண்ணிக்கை 1,584 தான். சாத்கர் பஞ்சாயத்தைச் சேர்ந்த பிளாக் 5 பங்களாமேடு வாக்காளர்களின் எண்ணிக்கை 367 பேர். இவ்வாக்காளர்கள் சுமார் 1 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள பகுதி 12 ஆண்கள், பெண்கள் ஆகிய இரண்டையும் சேர்த்து மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 2,069 ஆகும். அதேமாதிரி மற்றைய இடங்களிலேயும் தூரம் 1½ கிலோ மீட்டர் அளவிற்குள்ளும், 0.2 கிலோ

மீட்டர் அளவிற்கு மேலும் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், போதுமான அளவிற்கு தனித்தனி வாக்குச்சாவடிகள் இருப்பதற்கான வாக்காளர்கள் எண்ணிக்கை இல்லாத காரணத்தினாலும், ஒவ்வொரு கிராமத்திற்கும் வாக்குச்சாவடிகள் இருப்பது என்பதை ஆணையம் ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலும், இந்த வாக்குச்சாவடிகள் எங்கே வைக்கவேண்டுமென்று விரும்புகிறார்களோ அங்கே பாதுகாப்பான கட்டிட வசதி இல்லை என்கிற காரணத்தினாலும் இப்போது இருக்கிற முறையே சரியாகவும், போதுமானவையாகவும் அமைந்திருக்கிறது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை அனுப்பியுள்ளார்கள்.

டாக்டர் ஜெ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள், உடல் ஊனமுற்றோர், வயது முதிர்ந்தோர் போன்ற சிரமப்படுவர்களை மட்டுமாவது வாகனங்களில் அழைத்து வந்து வாக்களிக்க அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதில் அரசு முடிவெடுக்க முடியாது. தேர்தல் ஆணையம்தான் அதற்கான வழிமுறைகளைக் கூற வேண்டும். அப்படிப்பட்ட வழிமுறைகளை தேர்தல் ஆணையம் வகுக்குமேயானால் அப்போது அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 2, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

2--

தமிழ்நாடு சீட்டுக் கழகம்

*70703--**டாக்டர் மு. சீனியம்மாள்:**

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) 1984-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு மூடப்பட்ட தமிழ்நாடு சீட்டுக்கழகம் மீண்டும் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு சீட்டுக் கழகம் மீண்டும் துவக்கப்படும் உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.